30th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய தகவல் என்னிடமில்லை. சிறை ஆஸ்பத்திரியிலும் வெளியிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டது என்று தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறவேண்டிய நிலையில் அவர் இருந்திருக்கலாம். அவர் வியாதியுற்ற நிலையில் சடுகுடு விளையாடிக்கொண்டிருந்தார். அதற்கு முன்பே உடம்பு சரியாகவில்லை. அப்படி விளையாடிக்கொண்டிருக்கும்போது விழுந்தார். எங்கோ அடிபட்டது. பிறகு உடல் நிலை கெட்டுவிட்டது. சிறை ஆஸ் பத்திரியில் பார்த்தார்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவரை விடுதலை செய்து மருத்துவ மனைக்கு வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு மத்திய சிறைச்சாலையிலிருந்த மருத்துவர்களிடம் அவர் உடல் நிலையைத் தெரிவித்த போது இது சாதாரணமானது என்று அலட்சியமாகத் திருப்பி யனுப்பியதை அரசாங்கம் விசாரணை செய்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குப் பிறகுதான் சடுகுடு விளையாடினார். அதற்கு முன்பு அவருக்கு வியாதி இருந்தது. சிகிச்சை கோரினரா இல்லையா என்பதுபற்றிய தகவல் என்னிடமில்லை.

SRI L. S. KARAYALAR : Was there any allegation about the cause of the disease?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There was no allegation and there was no suspicion.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பொழுது நோய் முற்றிய நிலை எந்த அளவுக்கு இருந்தது என்று மருத்துவ நிபுணர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்தார்களா ? அரசாங்கமாவது அதைத் தெரிந்துகொண்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த வியாதியின் சின்னங்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அவை தெரிவிக்கப்பட்டன. ரத்த வாந்தி யெடுத்தார். மற்ற கோளாறுகள் எல்லாம் இருந்தன.

திரு. கே. ராமதாஸ் : சடுகுடு விளையாடியபோது மாரில் அடிபட்ட காரணத்தால் ரத்த வாந்தி யெடுத்தார் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சடுகுடு விளையாடியதாக தகவல் வந்திருக்கிறது. அதற்குப் பிறகு உடல்நிலை சரியில்லை.

Village Courts

* 126 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have evaluated the working of the Village Courts after the Madras Panchayats Act, 1958, has come into force; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI S. K. SAMBANDHAN : Will the Government at least now come forward to evaluate the working of the panchayat courts where they were working?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no need to evaluate the working of the panchayat courts. Formerly the panchayats had the jurisdiction. But under the Panchayats Act

enacted by this Legislature, that power has been removed. The Legislature intended and that was the Government's intention that the elected body should not have these judicial functions, civil or criminal functions. Therefore, Government do not think it necessary to evaluate what was done by panchayat courts previously.

Sri S. K. SAMBANDHAN : Will the Hon. Minister tell us how many panchayat courts are now being conducted by the village munsiffs in the State of Madras?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have notice.

Mechanised boats

* 127 *Q*.—Sri J. PONNUSAMY VILLAVARAYAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of mechanised boats given to fishermen on hire purchase system by the Fisheries Department as on 1st August 1962 ;

(*b*) the total cost of these mechanised boats ; and

(*c*) the number of mechanised boats given to (i) individuals and (ii) co-operative societies and the amount collected from them and the amount that remains to be collected as on 1st August 1962?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : (அ) 116 விசைப்படகுகள்;

(ஆ) அந்தப் படகுகளின் மொத்த விலை ரூ. 20,20,94,3·74 ந.பை.

(இ) மீனவர் தொகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டவை 76 படகுகள். (1—8—1962 நிலைமை.)

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்தவை 40 படகுகள். (1—8—1962 நிலைமை.)

வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 2,80,477·85.

வசூலிக்கப்படவேண்டியது ரூ. 10,03,495·92.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தலைவர் அவர்களே, இந்த விசைப் படகு சகல இடங்களிலும் செய்யப்படுகிறது. அப்படி ஒரு இடத்தில் செய்யப்பட்ட விசைப் படகு மற்ற இடங்களுக்கு உதவக் கூடியதாக இருக் கிறதா ? மேலும் விசைப் படகுக்காக எத்தனை இஞ்சின்கள் வாங்கப் பட்டன ? எத்தனை மிஷின்கள் பூட்டப்படாமல் தேங்கி இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுமா ?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : சகல இடங்களிலும் செய்யப்பட முடியாது. மூன்று இடங்கள் குளச்சல், மற்றும் சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் செய்யப்பட்டு வருகிறது. மற்ற கேள்விகள் தனியாகப் போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தூத்துக்குடியில் செய்யப் பட்ட விசைப் படகு இப்போது குறைந்த விலையில் செய்யப்பட்டும், அது மேலும் செய்யப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறதா ? அதை ராயபுரத்தில் மாற்றி அங்குதான் செய்யப்படும் என்று சொல்லப்படுகிறதா ?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : ராயபுரத்தில் பெரிய படகு கட்டும் நிலையம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு இருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறோம். அங்கு வேண்டாமென்று உத்திரவு போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.